

ஹர ஹர சங்கரா

FREE COPY
October - 2026
Vol. 5 - ISSUE 12

KODAMBAKKAM TIMES



மீனாக்ஷி அம்மன் கோவில் வரலாறு

ஒவ்வொரு கோயிலும் பல சந்ததிகளின் தொடர்ந்த கண்ணும் கருத்துமான பங்களிப்புகளால், அர்ப்பணிப்புகளால், பக்தியால் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அவைகளை கட்ட, வழிவழியாக காப்பாற்ற நம் முன்னோர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வலிகளை, தவத்தை நாம் உணர்வோமா? அவற்றை காப்பாற்ற முடியுமா? சிந்திப்போம்.

மீனாக்ஷி அம்மன் கோவில் கட்டப்பட்ட ஆண்டுகள்.

1168 -75 சுவாமி கோபுரம்
1216 - 38 ராஜ கோபுரம்
1627 - 28 அம்மன் சந்நிதி கோபுரம்
1315 - 47 மேற்கு ராஜ கோபுரம்
1372 - சுவாமி சந்நிதி கோபுரம்
1374 - சுவாமி சந்நிதி வெஸ்ட் கோபுரம்

1452 - ஆறு கால் மண்டபம்
1526 - 100 கால் மண்டபம்

1559 - சௌத் ராஜ கோபுரம் - முக்குரிணி விநாயகர் கோபுரம்
1560 - சுவாமி சந்நிதி நார்த் கோபுரம்
1562 - தேரடி மண்டபம்
1563 - பழைய ஊஞ்சல் மண்டபம், வன்னியடி நட்ராஜர் மண்டபம்

1564 - 72 வடக்கு ராஜ கோபுரம்
1564 - 72 வெள்ளி அம்பல மண்டபம், கொலு மண்டபம்
1569 - சித்ர கோபுரம், ஆயிரங்கால் மண்டபம், 63 நாயன்மார்கள் மண்டபம்
1570 - அம்மன் சந்நிதி மேற்கு கோபுரம்

1611 - வீர வசந்தராயர் மண்டபம்
1613 - இருட்டு மண்டபம்
1623 - கிளிக்கூட்டு மண்டபம், புது ஊஞ்சல் மண்டபம்
1623 - 59 ராயர் கோபுரம், அஷ்டஷக்தி மண்டபம்

1626 - 45 புது மண்டபம்
1635 - நகரா மண்டபம்
1645 - முக்குருணி விநாயகர்
1659 - பேச்சியக்காள் மண்டபம்
1708 - மீனாக்ஷி நாயக்கர் மண்டபம்
1975 - சேர்வைக்காரர் மண்டபம்

மீனாக்ஷி அம்மன் கோவில் கட்டியவர்களும், அந்த கால கட்டத்தில் ஆட்சி புரிந்தவர்களும்.

குலசேகர பாண்டியன் - 1168 - 75
மாறவர்மன் சுந்தரபாண்டியன் - 1216 - 38
பராக்ரம பாண்டியன் - 1315 - 47
விஸ்வநாத நாயக்கர் - 1529 - 64

கிருஷ்ணப்பா நாயக்கர் - 1564 - 72
வீரப்ப நாயக்கர் - 1572 - 94
கிருஷ்ணப்பா நாயக்கர் - 1595 - 1601
முத்துகிருஷ்ணப்பா நாயக்கர் - 1601 - 09

முத்து நாயக்கர் - 1609 - 23
திருமலை நாயக்கர் - 1623 - 1659
ரௌதிரபதி அம்மாள் மற்றும் தோளிமம்மை - 1623 - 59 (Wife of Thirumalai Naicker)
முத்து வீரப்ப நாயக்கர் - 1659

சொக்கநாத நாயக்கர் - 1659 - 82
முத்து வீரப்ப நாயக்கர் - 1682 - 89
விஜயரங்க சோகநாத நாயக்கர் - 1706 - 32
மீனாட்சி அரசி - 1732 - 36

மதுரையிலேயே பஞ்சபூதத் தலங்கள் உள்ளதை நம்மில் பலபேர் அறிந்திருக்க வாய்ப்பில்லை அவை :

மதுரை செல்லூரில் உள்ள திருவாப்புடையார் கோயில் : "நீர் ஸ்தலம்"
சிம்மக்கல் பழைய சொக்கநாதர் கோயில் : "ஆகாய ஸ்தலம்"
இம்மையில் நன்மை தருவார் கோயில் : "நில ஸ்தலம்"
தெற்கு மாசி வீதி தென் திருவாலவாயர் கோயில் : "நெருப்பு ஸ்தலம்"
தெப்பக்குளம் முக்தீஸ்வரர் கோயில் : "காற்று ஸ்தலம்" ஆகியவை மதுரையின் பஞ்சபூத ஸ்தலங்கள்

அதனால் தான் பஞ்சபூதங்களை உள்ளடக்கி வெள்ளை, ஊதா, பச்சை, சிவப்பு, மஞ்கள் நிறங்கள் கலந்த பஞ்சவர்ண கிளியை அன்னை மீனாட்சி கையில் பிடித்துள்ளாள்.

அப்பன் சிவனும் 64 திருவிளையாடல்களையும் கடம்பவனமாம் மதுரையிலேயே நிகழ்த்தி உள்ளார்.

திருவாரூரில் பிறந்தால் புண்ணியம், காஞ்சியில் வாழ்ந்தால் புண்ணியம், காசியில் இறந்தால் புண்ணியம், சிதம்பரத்தில் வழிபட்டால் புண்ணியம், திருவண்ணாமலையை நினைத்தாலே புண்ணியம்.

மதுரையில் பிறந்தாலும், மதுரையில் வாழ்ந்தாலும், மதுரையில் இறந்தாலும், மதுரையில் வழிபட்டாலும், மதுரையை நினைத்தாலும் புண்ணியம்.

சீறா நாகம், கறவா பசு, பிளிறா யானை, முட்டா காளை, ஓடா மான், வாடா மாலை, காயா பாறை, பாடா குயில் இவை அனைத்தும் மதுரை நகரின் அந்தக்காலத்து எட்டு திசைகளைக் குறிக்கும் எல்லை ஊர்கள்.

சீறா நாகம் : நாகமலை, கறவா பசு : பசுமலை, பிளிறா யானை : யானைமலை, முட்டா காளை : திருப்பாலை, ஓடா மான் : சிலைமான், வாடா மலை : அழகர்மலை, காயா பாறை : வாடிப்பட்டி, பாடா குயில் : குயில் குடி.

You can advertise for your Rental, Real Estate, Situation Vacant etc.,

KODAMBAKKAM TIMES

MAMBALAM & T NAGAR EDITION

COVERING AREA : Choolaimedu, Kodambakkam, Mambalam & T Nagar

K K NAGAR & VADAPALANI EDITION

COVERING AREA :

Ashok Nagar, Ramapuram, Virugambakkam & Valasaravakkam

044 2484 4114 / 93826 82128 / 89390 70034

E-mail : kodambakkamtimes@yahoo.com

தமிழகத்தில் கடுமையான தண்ணீர் தட்டுப்பாடு இந்த ஆண்டு ஏற்படலாம் என்ற பயம் மக்களிடையே உள்ளது. நாம் அனைவரும் சேர்ந்து தினமும் காஞ்சி மகா பெரியவாளால் தேர்ந்தெடுக்கப்பட்ட கீழ்கண்ட ஸ்லோகங்களை 9 முறை பாராயணம் செய்யலாமே. வடகிழக்கு பருவமழை வர இருப்பதால் நாம் இப்போதிலிருந்தே இதை ஆரம்பிக்கலாம்.

பரமாத்மாவை வேண்டிக்கொண்டு கூட்டு பிரார்த்தனையாக இதை செய்வோம் :

ரிச்ய ஸ்ருங்காய முனயே
விபண்டக சுதாயச
நமஹ: சாந்தாதிபதயே
சத்ய: சத்வ்ருஷ்டி ஹேதவே

விபண்டக சுத : ஸ்ரீ மாந்
சாந்தாபதி ரகல்மஷ :
ரிஷ்ய ச்ருங்க இதிக்யாத :
மஹாவர்ஷம் பிரயச்சது

மேற்கு நோக்கி அமர்ந்தோ, நின்றோ இந்த மந்திரத்தை ஜெபித்து மழை வர வேண்டிக்கொள்வோம்.

தீக்ஷை (தொடர்ச்சி)

..... பெரியவா தெய்வத்தின் குரல்

ஒரு ஜீவனுக்கு முதல் உபதேசம் எது? காயத்ரீதான். அந்த மந்திரத்தை உபதேசம் (ப்ரஹ்மோபதேசம்) செய்வது பிதா தானே? அதாவது காயத்ரீ மந்த்ர தீக்ஷை அப்பாதான் பண்ணுகிறார். இப்படி தீக்ஷை தருவதாலேயே அவரை "குரு" என்கிற வழக்கம் உண்டாகியிருக்கலாம். காயத்ரீ உபதேசத்தில் அதிகாரம் இல்லாதவர்களுக்கும் கூட அக்ஷராப்யாஸம் என்பது இருக்கிறது. அப்போது அஷ்டாக்ஷரமோ, பஞ்சாக்ஷரமோ உபதேசித்து அப்பன்காரன்தான் பிள்ளையை "ஆனா" எழுத வைக்கிறான். இந்த மந்த்ர உபதேசத்தாலேயே குரு ஆகிவிடுகிறான்.



உள் அனுபவ கனமும், பெருமையும் இல்லாதவனான தகப்பனாரையோ, வாத்தியாரையோ குருவாக நினைத்து சரணாகதி செய்து விட்டாலும் அந்த சரணாகதியின் கனத்தாலும் பெருமையாலுமே இப்படிப்பட்ட யோக்யதைக் குறைச்சலான குருவிடமிருந்தும் ஞானத்தைப் பெற்று விடலாம். அதாவது அநுக்ரஹிக்க வேண்டும் என்ற எண்ணங்கூட இல்லாத மஹா அநுபவியான குரு மூலமாகவும் சிஷ்யனுடைய சரணாகதியை மெச்சி அருள் புரிந்து விடுவான். குரு என்று ஆச்ரயிக்கப்படுபவர் அபாத்ரராயினும் அவரிடம் அந்தரங்க விஸ்வாஸம் வைத்து, அவர் என்ன செய்தாலும் அவருடைய பெருமைக்குக் குறைவாகப் பேசாமலும் நடக்காமலும் ஒரு சிஷ்யன் இருந்து விட்டால் அந்த குரு உய்வு பெற்றாலும் பெறா விட்டாலும் இந்த சிஷ்யன் உய்வு பெற்று விடுவான்.

இப்படிப்பட்ட குரு பக்தியை நினைக்கும்போது எனக்கு ஒரு ஸம்பவம் ஞாபகம் வருகிறது. ஒரு தரம் மடத்துப் பாடசாலைப் பசங்கள் இரண்டு பேரிடம் வாத்தியார் வந்து விட்டாரா என்று கேட்டேன். ஒரு பையன் வரவில்லை என்றான். மற்றவன் வந்துவிட்டார் என்றான். அப்புறம் முதல் பையன் சொன்னதுதான் நிஜம் என்று தெரிந்தது. நான் இரண்டாவது பையனிடம் "ஏன் பொய் சொன்னே? பொய் சொன்னா தப்பில்லையா? என்று கேட்டேன். அதற்கு அவன் தைரியமாக "பாட நேரம் வந்தும் வாஸ்தவத்தில் வாத்தியார் வராமலிருந்தாரென்றாலும் அவர் வரவில்லை என்று சொன்னால் குருவின் தப்பை வெளியிலே சொன்னதாகும். பொய் சொல்வதை விட இப்படி குருவைப்பற்றி தப்பு சொல்வதுதான் பெரிய தப்பு என்பதாலேயே அப்படிச் சொன்னேன் என்றான். நானும் அவன் பண்ணினதை சரி என்று ஒப்புக் கொண்டேன். குரு பக்தி விசேஷத்துக்காகச் சொன்னேன்.

குரு எப்படியிருந்தாலும் அவருக்கு ஆத்மார்ப்பணம் பண்ணிவிட்டால் குருவால் எது கிடைக்க வேண்டுமோ அது ஈஸ்வர ப்ரஸாதமாகக் கிடைத்துவிடும்.

ஒரே கல்லில் ஒரு பிரம்மாண்டம்

பக்திக்கும், கலைநயத்திற்கும் இலக்கணமாகத் திகழும் ஒரு அதிசயத்தை நீங்கள் தரிசிக்க வேண்டுமா? அப்படியானால் நீங்கள் செல்ல வேண்டிய இடம் ஆந்திர மாநிலம் சித்தூர் அருகே உள்ள வேப்பஞ்சேரி லட்சுமி நாராயண பெருமாள் திருக்கோயில். இந்தக் கோயிலின் ஆகச்சிறந்த பிரம்மாண்டமே இங்குள்ள தசாவதாரச் சிலை தான்.



இந்தச் சிலையின் சிறப்பம்சங்கள் : ஒரே கல் அதிசயம் : சுமார் 21 அடி உயரத்தில் பிரம்மாண்டமான ஒரே கல்லில் இந்தச் சிலை செதுக்கப்பட்டுள்ளது. சிற்பக் கலையின் உச்சமாக இது கருதப்படுகிறது. பத்து அவதாரங்கள் ஒரே இடத்தில் : மகாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களையும் (மச்சம் முதல் கல்கி வரை) உள்ளடக்கிய இந்த தசாவதாரக் கிருஷ்ணரின் உருவம் காண்போரை மெய்சிலிர்க்க வைக்கும்.

தீர்த்தக் குளத்தின் அழகு : தசாவதார தீர்த்தக் குளத்தின் அருகிலேயே இந்தச் சிலை அமைந்துள்ளது. குளத்தின் நடுவே காளிங்க நர்த்தனம் புரியும் கண்ணனின் சிலையும், குளத்தைச் சுற்றி தனித்தனி அவதாரச் சிலைகள் என அந்த இடமே வைகுண்டமாக காட்சியளிக்கிறது.

பரிகாரத் தலம் : தீராத வினைகள் தீரவும், கிரக தோஷங்கள் விலகவும் இந்த தசாவதாரச் சிலையை வலம் வந்து வழிபடுவது விசேஷம் என்று சொல்லப்படுகிறது. குறிப்பாக இனிப்புச் சுவை கொண்ட இந்தத் தீர்த்தக் குளத்தில் நீராடி பெருமாளை வணங்கினால் சகல பாவங்களும் நீங்கும் என்பது நம்பிக்கை.

அஷ்டதிக்கு பாலகர்கள்

நமது சனாதன தர்மத்தில் பிரபஞ்சத்தின் ஒவ்வொரு அசைவிற்கும், திசைக்கும் ஒரு தனித்துவமான ஆன்மீக முக்கியத்துவம் உண்டு. நமது வீட்டின் வாஸ்து முதல் பிரபஞ்சத்தின் பாதுகாப்பு வரை அனைத்தையும் தீர்மானிப்பது இந்த திசைக் காவலர்கள் தான்.

எட்டு திசைகளும் அதன் காவலர்களும் :

இந்திரன் (கிழக்கு -East)
திசை : கிழக்கு
வாகனம் : ஐராவதம் என்ற வெள்ளை யானை
சிறப்பு : தேவர்களின் தலைவன், மழையையும் செல்வத்தையும் தருபவர்.



அக்கினி (தென்கிழக்கு - South East) :

திசை : தென்கிழக்கு (அக்னி மூலை)
வாகனம் : ஆடு
சிறப்பு : யாகங்களின் நாயகன் : ஆற்றல் மற்றும் ஒளியின் வடிவம்.

யமன் (தெற்கு - South) :

திசை : தெற்கு
வாகனம் : எருமை
சிறப்பு : தர்மத்தின் காவலன், நீதியை நிலைநாட்டுபவர்.

நிருதி (தென்மேற்கு - South West) :

திசை : தென்மேற்கு (கன்னி மூலை)
வாகனம் : நரன் : சிங்கம் (படத்தில் சிங்க வாகனத்துடன் சித்தரிக்கப்பட்டுள்ளது)
சிறப்பு : அரக்கர் குல அதிபதி, தீய சக்திகளிடமிருந்து பாதுகாப்பவர்.

வருணன் (மேற்கு - West) :
திசை : மேற்கு
வாகனம் : மகரம் (கடல் வாழ் உயிரினம்/முதலை போன்ற வடிவம்)
சிறப்பு : மழை மற்றும் கடல்களின் அதிபதி, உலகிற்கு நீராதாரத்தை வழங்குபவர்.

வாயு (வடமேற்கு - North West) :
திசை : வடமேற்கு (வாயு மூலை)
வாகனம் : மான்
சிறப்பு : காற்றின் அதிபதி, பிராண வாயுவை வழங்கி உலகை இயக்குபவர்.

குபேரன் (வடக்கு - North) :

திசை : வடக்கு

வாகனம் : குதிரை (பண்டைய சில நூல்களின்படி குதிரை வாகனத்திலும் குபேரன் சித்தரிக்கப்படுவதுண்டு)
சிறப்பு : செல்வத்தின் அதிபதி, நவநிதிகளையும் காப்பவர்.

ஈசானன் (வடகிழக்கு - North East) :
திசை : வடகிழக்கு (ஈசானிய மூலை)
வாகனம் : ரிஷபம் (காளை)
சிறப்பு : சிவபெருமானின் அம்சம், ஞானம் மற்றும் மங்களத்தின் வடிவம்.

ஏன் இந்த அஷ்டதிக்குப்பாலகர் வழிபாடு முக்கியம்?

நமது முன்னோர்கள் வாஸ்து சாஸ்திரத்தின்படி வீடு கட்டும் போது, இந்த எட்டு திசைகளின் ஆற்றலையும் சமநிலையில் வைத்திருக்கவே அக்னி மூலை, கன்னி மூலை, ஈசானிய மூலை போன்றவற்றை சரியாக அமைத்தார்கள். இந்த திசைக் காவலர்களை வழிபடுவது நம் வாழ்வில் சுபிட்சம் மற்றும் அமைதியைக் கொண்டுவரும், வீட்டில் உள்ள எதிர்மறை ஆற்றல்களை நீக்கும், அனைத்து திசைகளிலிருந்தும் நன்மைகளை ஈர்க்கும்.

"ஓம் அஷ்டதிக்குபாலகாய நமஹ"

பஞ்ச நாமங்கள்

எப்படியாவது மனிதன் தம்மை நோக்கி ஓர் அடியாவது எடுத்து வைக்க மாட்டானா? என கடவுள் ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிராறாம்.

திருமாலின் பஞ்ச நாமங்கள்

1. ராம நாமம் :

ராமா ராமா ராமா என்று ஒரு நாளைக்கு எத்தனை தரம் முடியுமோ மனதில் அத்தனை தடவை சொல்லுங்கள். மனதில் சஞ்சலங்கள், துக்கங்கள், குழப்பங்கள் வரும் போது தனியாக ஓரிடத்தில் அமர்ந்து மனதிற்குள் "ராம" நாமத்தைச் சொல்லுங்கள். மனம் அமைதி அடைவது நிச்சயம் .. ராமா என்ற நாமத்தைக் கேட்டாலே அனுமன் அந்த இடத்தில் வந்து அமர்ந்து விடுகிறானாம்.

"யத்ர யத்ர ரகுநாத கீர்த்தனம்
தத்ர தத்ர ஹ்ருதமஸ்த காஞ்சலிம்"

SREE MANGALAGURU
JOTHIDA NILAYAM
'VAAZHVIL VELICHAM'
SURESH MADHAVAN
93609 45818
(With Appointment Whatsup Only)



பத்தாயிரம் ராமநாமாக்கள் சொன்னால் ஏழு கோடிமந்திரங்கள் சொன்னபலனாம்.

2. க்ருஷ்ணா

இந்த நாமமே பாண்டவர்களைக் கூடவே இருந்து காத்தது. குந்தி க்ருஷ்ணனிடம் கேட்ட வரம் "க்ருஷ்ணா எனக்கு கஷ்டங்களைக் கொடு அப்போது தான் உன்னை மறவாமல் இருப்பேன்" என்றாள் கஷ்டங்களைத் தாங்கும் மன வலிமையைக்கொடுக்கும் நாமம்.

3 நாராயணா

சிறுவன் ப்ரஹ்லாதனை காத்த நாமம். எத்தனை இடர்கள் அவன் அடைந்த போதும் அவனை காப்பாற்றிய நாமம். பகவானுக்கு பிடித்த குழந்தை அவன். ஆண்டாள் தன் பாசுரத்தில் "நாராயணனே நமக்கே பறை தருவான் என்று "ஏ" காரத்தில் பெருமை பொங்க சொன்ன நாமம்.

4 கோவிந்தா

துச்சாதனன் பாஞ்சாலியை சபையில் துகிலுரித்த போது நிர்கதியாக நின்ற அவளுக்கு கை கொடுத்த நாமம். தனது இரு கைகளையும் உயரத் தூக்கி "கோவிந்தா, கோவிந்தா" எனக் கதறிய போது அவள் மானத்தைக் காப்பாற்றிய நாமம் அன்றும், இன்றும், என்றும் திருமலையில் ஒலித்துக் கொண்டே இருக்கும் நாமம்.

5 நரசிம்மா

பக்தர்கள் கேட்டதை உடனே கொடுப்பவனாம். "நாளை என்பதே இல்லை நரசிம்மனுக்கு அதனால் தான் ப்ரகலாதன் அழைத்த உடனே தூணைப் பிளந்து கொண்டு வந்தான். "நீயே கதி" என சரணடைந்த அடியார்களுக்கு உடனே கஷ்டங்களிலிருந்து விமோசனம் கொடுப்பானாம். "ஆகட்டும் அப்புறம் பார்க்கலாம்" என்று சொன்னதே இல்லையாம். அப்படிப்பட்ட கருணாமூர்த்தி அவன் அதனால் தான் விஷ்ணு சகஸ்ரநாமத்தில்

"நாரஸிமஹ" வபு ஸ்ரீமான் கேசவ புருஷோத்தம:
என்று நரசிம்மன் பெருமையை புகழ்ந்து சொன்னார் பீஷ்மர்

ராமா, கிருஷ்ணா, நாராயாணா, கோவிந்தா, நரஸிம்மா என்ற இந்த எளிமையான ஐந்து திருநாமங்களையும் எப்போது நாத்தழும்பேறக் கூறுவோம். திருமாலின் இந்த திருநாமங்கள் நம்மை உய்விக்கும் என்பதில் எள்ளவும் சந்தேகமில்லை.



ரிஷிவந்தியம் அர்த்தநாரீஸ்வரர் கோவில்

ரிஷிவந்தியம் அர்த்தநாரீஸ்வரர் கோவில் - தேனாபிஷேக அற்புதமும், வரலாற்றுச் சிறப்பும்.

தமிழ்நாட்டில் பல அருள்மிகு ஆலயங்கள் இருந்தாலும், விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் அருகே உள்ள ரிஷிவந்தியம் அர்த்தநாரீஸ்வரர் திருக்கோவில் மிக அபூர்வமான ஒரு அதிசயத்திற்குப் பெயர் பெற்றது.

தேனாபிஷேகத்தில் மலரும் அர்தநாரீஸ்வர வடிவம் :

தினமும் உச்சிகால பூஜையின் போது, இங்குள்ள சுயம்பு லிங்கத்திற்கு தேனாபிஷேகம் செய்யப்படும் போது மட்டுமே லிங்க பாணத்தில் அம்பாள் தன் கையில் கிளியை ஏந்தி இடை நெளிந்து நிற்கும் வடிவம் மிகத் தெளிவாகக் காட்சி அளிக்கும். மற்ற நீர், பால் போன்ற அபிஷேகங்களின் போது இந்த வடிவம் மறைந்து சாதாரண லிங்கமாகவே காட்சி தரும்.

தல வரலாறு & சிறப்புகள் :

இந்திரனின் அகந்தை தீர்த்த தலம் :

தினசரி 108 குடம் பாலால் சிவனை மட்டும் வழிபட்டு அம்பாளை மறந்த இந்திரனுக்கு பாடம் புகட்ட பார்வதி தேவி பால் குடங்களை மறைத்தாள். தன்

தவறை உணர்ந்து உயிரை மாய்க்க முயன்ற இந்திரனுக்கு காட்சியளித்து, "இனி சிவ சக்தி இருவரையும் ஒன்றாகவே வழிபட வேண்டும்" என உணர்த்தி, தேனாபிஷேகத்தில் அர்த்தநாரீஸ்வரராக ஈசன் அருள் பாலித்த இடம் இது.

ரிஷிகள் வழிபட்ட பூமி :

வசிஷ்டர், அகத்தியர் போன்ற மாமுனிவர்கள் (ரிஷிகள்) இறைவனை வணங்கி வழிபட்டதால் (வந்தித்ததால்) இவ்வூர் ரிஷிவந்தியம் என்ற பெயர் பெற்றது.

செவ்வாய் தோஷ நிவர்த்தி :

நாக தோஷம், செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் மற்றும் திருமணத் தடை உள்ளவர்கள் இங்குள்ள சுயம்பு லிங்கத்திற்கும், முத்தாம்பிகை அம்மனுக்கும் தேனாபிஷேகம் செய்து வழிபட்டால் தடைகள் நீங்கி விரைவில் திருமணம் கைகூடும் என்பது நம்பிக்கை.

கோவில் அமைவிடம் :

விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரத்தில் இருந்து சுமார் 20 கி.மீ தொலைவில் ரிஷிவந்தியம் அமைந்துள்ளது.

சிவசக்தி ஒன்றுடன் ஒன்று இணைந்ததே உலகம் என்பதை உணர்த்தும் இந்த அற்புதத் தலத்திற்கு ஒருமுறையேனும் சென்று அந்தத் தேனாபிஷேகக் காட்சியைக் கண்டு ஈசனின் அருள் பெறுவோம்.

குரு சரணம் குரு நாதா சரணம்

அவிதவா நவமி

பித்ரு லோகத்திலிருந்து இறந்தவர்களின் (நம் முன்னோர்களின்) ஆன்மாக்கள் தர்மராஜனின் அனுமதியோடு பூலோகத்திற்கு வந்து தனது சந்ததியினரையும், சொந்தங்களையும் காண வரும் காலமே மஹாளய பட்சம் என்று சொல்லப்படுகிறது. புரட்டாசி மாதம் அமாவாசைக்கு முன்னர் வரும் தேய்பிறை பிரதமை முதல் மஹாளய அமாவாசை வரையுள்ள நாட்களை மஹாளய பட்சம் என்று கூறவார்கள்.

மேற்கூறிய அனைத்து நாட்களுமே முன்னோர் வழிபாட்டுக்கு உகந்த நாட்கள் தான் நம்மை விட்டு சென்ற தாய் தந்தைக்கு மட்டுமல்லாது, பிற உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் தர்ப்பணம் செய்து வழிபடலாம் என்பது மஹாளய பட்சத்தின் சிறப்பாகும். இதில் சில குறிப்பிட்ட தினங்கள் விசேஷமானவை. அத்தகைய தினங்களில் ஒன்றான அவிதவா நவமி பற்றி தெரிந்து கொள்வோம்.

மத்யாஷ்டமிக்கு அடுத்து வரும் நவமி, அவிதவா நவமி எனப்படுகிறது. குடும்பங்களில் சுமங்கலிகளாக வாழ்ந்து மறைந்த பெண்கள் குடும்பத்தை

காக்கும் தெய்வங்களாகத் திகழ்வர் என்பது நம்பிக்கை. அவிதவா என்றால் சுமங்கலி என்று பொருள். அதாவது சுமங்கலிகளுக்கு உரிய நன்னாள். கணவருடன் சேர்ந்து வாழும் பெண் தர்ம காரியங்கள் பலவற்றையும் செய்கிறாள். கணவன் செய்யும் தான தர்மங்கள் அனைத்திலும் மனைவியும் உடன் இருக்க வேண்டும் என்று கூறுகிறது சாஸ்திரம். மனைவியானவள் சுமங்கலியாக இறந்து விட்டாலும் கூட அவள் கணவன் செய்யும் எல்லாக் காரியங்களிலும் அவளை முன்னிருத்தியே எல்லாம் செய்வதாக சொல்லுகிறார்கள் நம் ஆச்சார்யர்கள். இதனை "அவிதவா" என்று சாஸ்திரம் கூறுகிறது. அப்படி சுமங்கலியாக இறந்தவர்களுக்கு உரிய நாளாக அவிதவா நவமி நாள் உள்ளது.

அவிதவா நவமி நாளில் பித்ரு தர்ப்பணம் செய்ய வேண்டும். நம் வீட்டில் தன் கணவருக்கு முன் இறந்துவிட்டவர்களின் ஆத்மா சாந்தி அடையும் பொருட்டு கன்னிப் பெண்களை வீட்டிற்கு அழைத்து வஸ்திரம் கொடுத்து, உணவளித்து தாம்பூலம் வழங்க வேண்டும். மேலும் சுமங்கலி பெண்களுக்கு புடவை, ரவிக்கையுடன் தாம்பூலம் வழங்க வேண்டும். இதனால் சுமங்கலியாக இறந்த பெண்களின் ஆசியுடன் பித்ருக்களின் ஆசியும் கிடைக்கும் என்கிறார்கள் ஆச்சார்யர்கள். இதனால் குடும்பத்திற்கு அனைத்து நலன்களும் கிடைக்கப் பெற்று இன்னல்கள் குறைந்து மனதில் நிம்மதி உண்டாகும். கருத்து வேற்றுமை அகன்று தம்பதிகளிடையே ஒற்றுமை ஏற்படும். கணவனின் ஆயுள் நீடிக்கும் என்பது ஐதீகம்.

சுமங்கலி வழிபாடுகள் மற்றும் பிரார்த்தனைகள் செய்யாதவர்களின் குடும்பங்களில் சுப காரிய தடைகள் உண்டாகும் என்று சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது. இவ் வழிபாட்டை மறந்தவர்கள் மஹாளய பட்சத்தில் வரும் "அவிதவா நவமி" நாளிலாவது நம்மை விட்டு பிரிந்த மூத்த பெண்களை மறக்காமல் வழிபட்டு தங்களால் இயன்ற தானங்களை வழங்குவதன் மூலம் அவர்களின் ஆசியைப் பெற்று நிறைவான வாழ்வைப் பெறலாம்.

..... ஹேமலதா க்ருஷ்ணகுமார்

அஷ்ட நாகங்கள்

அஷ்ட நாகங்கள் (எட்டு வகை நாகங்கள்) பூமியைத் தாங்குவதாகவும், தெய்வீக ஆற்றல் கொண்டதாகவும் கருதப்படும் எட்டு முக்கிய நாகங்களே அஷ்ட நாகங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

அனந்தன் (ஆதிசேஷன்)

இவர் நாகங்களின் அரசன். ஆயிரம் தலைகளைக் கொண்டவர். பாற்கடலில் மகாவிஷ்ணுவின் படுக்கையாக விளங்குபவர். இந்தப் பூமியைத் தனது தலைகளின் மீது சுமந்து காப்பவர் இவரே.

வாசுகி

சிவபெருமானின் கழுத்தில் ஆபரணமாக இருப்பவர். தேவர்களும், அசுரர்களும்



பாற்கடலைக் கடைந்தபோது, மத்தாகப் பயன்படுத்தப்பட்ட மந்திர மலைக்கு கயிறாகப் பயன்படுத்தப்பட்டவர் இவரே. மிகுந்த பொறுமையும், சக்தியும் கொண்டவர்.

தசஷகன்

நாகலோகத்தின் சக்திவாய்ந்த மன்னன். மகாபாரத இதிகாசத்தில், ஜனமேஜய மகாராஜாவின் சர்ப்ப யாகத்தோடு தொடர்புடையவர். தந்திரமும் வீரமும் மிக்கவர்.

கார்கோடகன்

சூரிய பகவானின் தேர்ச்சக்கரத்தில் இருப்பதாகக் கூறப்படுபவர். நளன் மற்றும் தமயந்தி கதையில் நளனுக்கு உதவி செய்தவர். இவரை வணங்கினால் விஷ பயம் நீங்கும் என்பது நம்பிக்கை.

பத்மன்

தர்மத்தின் காவலனாக விளங்குபவர். மிகுந்தா தேஜஸ் (ஒளி) கொண்டவர். தெற்கு திசையைத் தாங்கும் ஆற்றல் கொண்டவர் என்று பாராயணங்கள் கூறுகின்றன.

மகாபத்மன்

பெயருக்கேற்றார் போல மிகப்பெரிய உருவம் கொண்டவர். வடக்கு திசையில் தர்மத்தைக் காப்பவர். இவரை வழிபடுவது செல்வத்தையும், மன அமைதியையும் தரும்.

சங்கன்

கடல் மற்றும் நீர் நிலைகளுடன் தொடர்புடையவர். சங்கைப் போன்ற வெண்மை நிறம் கொண்டவர். செல்வத்தின் அடையாளமாகவும் இவர் கருதப்படுகிறார்.

குளிகன்

காலத்தின் கட்டுப்பாட்டில் இருப்பவர். ஜோதிட சாஸ்திரப்படி சனி பகவானின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவர். இவரை வழிபடுவது ராகு, கேது தோஷங்களை நீக்க வல்லது. இந்த அஷ்ட நாகங்களை வழிபடுவது நாக தோஷங்களை நீக்கி வாழ்க்கையில் பாதுகாப்பு மற்றும் செழிப்பைத் தரும் என்பது ஆன்மீக நம்பிக்கை.

அஷ்ட நாகங்கள் குறித்த ஆன்மீகத் தகவல்களைத் தொடர்ந்து இவை தொடர்பான சில கூடுதல் குறிப்புகள்.

வழிபாட்டின் பலன்

பொதுவாக நாக வழிபாடு என்பது வம்ச விருத்திக்கும், குடும்பத்தில் உள்ள தடைகள் நீங்கி சுபிட்சம் உண்டாவதற்கும் மேற்கொள்ளப்படுகிறது.

நாக தோஷம் அல்லது ராகு-கேது தோஷங்களால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த அஷ்ட நாகங்களை நினைத்து வழிபடுவது நன்மைகளைத் தரும் என்று கருதப்படுகிறது.

கோவில் மற்றும் தலங்கள்

தமிழ்நாட்டில் நாக தோஷ பரிகாரத்திற்கு என்று தனிச்சிறப்பு வாய்ந்த பல திருத்தலங்கள் உள்ளன. குறிப்பாக திருநாகேஸ்வரம் மற்றும் காளஹஸ்தி போன்ற தலங்கள் நாக வழிபாட்டிற்குப் புகழ்பெற்றவை.

பஞ்சமி திதி

நாகவழிபாட்டிற்கு உகந்த நாட்களாகச் சதுர்த்தி, பஞ்சமி மற்றும் சஷ்டி திதிகள் கருதப்படுகின்றன. மாதந்தோறும் வரும் வளர்பிறை பஞ்சமி திதியில் நாக தேவதைகளை வழிபடுவது மிகுந்த புண்ணியத்தைத் தரும் என்பது நம்பிக்கை.

குலதெய்வ வழிபாடு

பல குடும்பங்களில் அந்தந்தக் குலத்திற்குரிய குலதெய்வமாக அல்லது காவல் தெய்வமாக நாக தேவதைகள் வணங்கப்படுகின்றன.

இத்தகைய குடும்பத்தினர் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் நாகருக்குப் பால் ஊற்றி அபிஷேகம் செய்து வழிபடுவதைப் பாரம்பரியமாக வைத்துள்ளனர்.

இந்த அஷ்ட நாகங்களின் பெயர்களைத் தினசரி துதிப்பது அல்லது நாக ஸ்தோத்திரங்களைக் கேட்பது மன அமைதியைத் தரும் என்று ஆன்மீக நூல்கள் கூறுகின்றன.

ராதாரமணன் அவதரித்த தினம்



1543ம் வருடம் நரசிம்ம ஜயந்தி அன்று இரவு ஸ்ரீ கோபால பட்ட கோஸ்வாமிக்கு தனக்கும் ஆராதனா மூர்த்தியாக அழகான உருவத்துடன் ஒரு மூர்த்தி இருந்தால் எத்தனை அழகாக அலங்காரம் செய்து மகிழ்வேன் என்று ஆதங்கம் உண்டாயிற்று. ஏனெனில் அவர் வைத்திருந்த சாளக்ராமங்கள் எல்லாம் கல் உருவம் தானே ... அவரின் அந்த தாபத்தை சரிசெய்ய பகவான் தாமோதர சாளக்ராமத்தில் நரசிம்ம ஜயந்தி அன்று இரவு விருந்தாவனத்தில் ராதாரமணனாக ஆவிர்பவித்தான்.

KRISHNA DELISH COFFEE



எங்களிடம் தரமான காபி கொட்டை அரைத்து தரப்படும்



அனைவருக்கும் இனிய சரஸ்வதி பூஜை மற்றும் ஆயுத பூஜை நல்வாழ்த்துக்கள்

1 கிலோ காபி பவுடர் ரூ 920 மட்டுமே

* Condition Apply

நம்ம ஆத்து காபி FILTER COFFEE RS. 25 only



COFFEE POWDER DOOR DELIVERY FREE ALSO AVAILABLE

No. 1 & 2 Murthy Street,
Arya Gowda Road, West Mambalam,
Next to Ayodhya Mandabam. Ch-33.

Ph : 9941578181

மயிலாப்பூர் கணபதிஸ்
ஆயுத பூஜை
விஜயதசமி நல்வாழ்த்துக்கள்



மயிலாப்பூர்
கணபதிஸ்®
ஸ்தாபிதம் 1942

வெண்ணெய் & நெய்

பாரம்பரியமாக 1942 முதல்

மயிலாப்பூர் கிளை :
14, சித்திரைக்குளம் மேற்கு தெரு,
[வி. கே. மஹால் கல்யாண மண்டபம் அருகில்]
மயிலாப்பூர், சென்னை - 600 004
போன் : 044 - 2464 0292, 89390 27272

மேற்கு மாம்பலம் கிளை :
50, ஆர்ய கவுடா ரோடு,
[ஷோபனா கல்யாண மண்டபம் அருகில்]
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033
போன் : 044 - 4856 6363, 89390 36363

கருத்துக்களை தெரிவிக்க : 044 – 4856 6781 | வாட்ஸ் அப் : 73581 56781
மின்னஞ்சல் : info@mylaporeganapathys.com
ஆன்லைன் ஆர்டர்கள் www.mylaporeganapathys.com